தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994 மார்ச் 18, வெள்ளிக்கிழமை

பங்குனி 4, ஸ்ரீமுக, திருவள்ளுவர் ஆண்டு-2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்''

அவையின் தன்மையை அறியாமல் ஒன்றைச் சொல்ல முற்படுவோர்க்கு, சொல்லின் வகையும் தெரியாது, கற்றுத்தேறிய கலையிலும் வல்லமை இருக்காது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 21, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு நிதி அமைச்சர்.

21—

சிறு சேமிப்பில் அதிக அளவில் முதலீடு செய்ய அரசு வழங்கும் சலுகைகள்.

* 22994—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு சேமிப்பில் அதிக அளவில் முதலீடு செ ய அரசு வழங்கியுள்ள சலுகைகள் பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

விவரமான அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[1994 மார்ச் 18

அறிக்கை.

இந்த நிதியாண்டில் சிறு சேமிப்புத் திட்டங்களில் அதிக அளவில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு சிறு சேமிப்பு முதலீட்டாளர்களுக்கும், முகவர்களுக்கும், மாவட்டங்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் பள்ளிகளுக்கும் மிகவும் சிறப்பான கீழ்க்கண்ட சலுகைகளை தமிழக அரசு வழங்கி செயல்படுத்தி வருகிறது. இதன் விபரம் வருமாறு :

(1) மாவட்ட அளவிலான இலவச பரிசுக் கூப்பன் திட்டம் :

இத்திட்டத்தின்படி 1—4—1993 முதல் சிறு சேமிப்புத் திட்டங்களின் கீழ் தமிழகத்தில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ. 500 முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பன் வீதம் வழங்கப்பட்டு, ஒரு லட்சம் இலவச பரிசுக் கூப்பன்களுக்கு ஒரு பரிசுக் குலுக்கல் நடத்தி முதல் பரிசாக ஒரு மாருதி ஆம்னி வேன் அல்லது டில்லருடன் கூடிய டிராக்டர் உள்பட 619 கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய பரிசுத் திட்டம் வேறு எந்த மாநிலங்களிலும் செயல்படுத்தப்படவில்லை.

(2) முதலீட்டாளர்கள் ஊக்கத் தொகைத் திட்டம் :

தமிழகத்தில் 1—4—1993 முதல் பல்வேறு சிறு சேமிப்பு திட்டங்களில் ரூ. 1,000 மற்றும் அதற்கு மேல் வைப்பீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 2 சதவீத ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. சென்னை நகரில் முதலீட்டாளர்களின் வசதியை முன்னிட்டு, ரிசர்வு வங்கியின் உதவியுடன் சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களின் வங்கிக்கணக்கிலேயே ஊக்கத் தொகையை வரவு வைத்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(3) மாவட்டங்களுக்கு ஊக்கத் தொகை :

அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை மிஞ்சி சாதனை படைத்துள்ள மாவட்டங்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்த உதவும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், 100 சதவீதத்திற்கு மேல் இலக்கினை எய்துள்ள மாவட்டங்களுக்கு கேடயமும் வழங்கப்படுகிறது.

(4) மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் :

1. இத்திட்டத்தின் கீழ் அதிக வசூல் செய்யும் உள்ளாட்சி நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக ரூ. 2 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(5) முகவர்கள் ஊக்கத் தொகை திட்டம் :

சிறு சேமிப்பு திட்டங்களில் வசூல் செய்து செலுத்தப்படும் தொகைக்கு மத்திய அரசு சிறு சேமிப்பு முகவர்களுக்கு 1 சதவீத கமிஷன் அளித்து வருகிறது. முகவர்களை ஊக்குவிப்பதற்காக 1—4—1993 முதல் எஸ். ஏ. எஸ். மற்றும் பி. பி. எப். முகவர்களுக்கு மத்திய அரசு வழங்கும் கமிஷன் தொகைக்கு ஈடாக தமிழக அரசும் வழங்குகிறது. மற்றும் எம். பி. கே. பி. ஓய். முகவர்களுக்கு மத்திய அரசு வழங்கும் கமிஷன் தொகையில் 50 சதவீத ஊக்கத் தொகையை தமிழக அரசும் வழங்குகிறது. இந்த முகவர்களின் ஊக்கத் தொகையை 31—3—1996 வரை விரிவுபடுத்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(6) முகவர்கள் பரிசுக் கூப்பன் திட்டம் :

முகவர்கள் வசூல் செய்யும் ஒவ்வொரு ரூ. 10,000-க்கும் ஒரு பரிசு கூப்பன் வழங்கப்பட்டு ஒரு இலட்சம் கூப்பன்களுக்கு ஒரு குலுக்கல் நடத்தப்பட்டு 425 கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படுகின்றன.

(7) சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம் :

மாணவ, மாணவியர்களுக்கு பள்ளிப் பருவத்திலேயே சேமிப்புத் திறனை ஊக்குவிப்பதற்காகவும், வங்கிக் கணக்குகளை செயல்படுத்தும் முறையை பயிற்றுவதற்காகவும் ''சஞ்சாயிகா திட்டம்'' செயல்படுகிறது. மாநில அளவிலான மேல்நிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளிடையே வினாடி வினாப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. மற்றும் சஞ்சாயிகா சேமிப்புத் திட்டத்தை செயல்படுத்தும் பள்ளி மாணவர்களுக்கும், ஆசிரியர் மற்றும்பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் அப்பள்ளிகளுக்கும் மாவட்ட மற்றும் மாநில அளவில் பல்வேறு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

(8) சம்பளப் பட்டியல் திட்டம் :

தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து முதிர்வடைந்த கணக்குகளுக்குரிய முதிர்வு தொகை அஞ்சலகத்தில் சென்று பெறுவதற்கு பதிலாக அந்தந்த நிறுவனங்களிலேயே அஞ்சலகத்துறை ஊழியர்கள் மற்றும் சிறுசேமிப்புத் துறை ஊழியர்கள் மூலமாக வழங்கப்படுகிறது. 100 புதிய கணக்குகள் ஆரம்பிக்க ஊக்கமளிக்கும் குழுத் தலைவர்களுக்கு ரூ. 50 பெறுமான ஒரு ரெக்ஸின் பை பரிசாக வழங்கப்படுகிறது.

ALONE TRIUMPHS

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சேமிப்பு நாளைக்கு முதலீடு என்கிற கொள்கையை பரப்பி, சிறு சேமிப்புத் துறைக்கு ஊக்கம் அளித்து, பல்வேறு கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்து, அதன்மூலம் இந்தியத் துணைக் கண்டத்தில் 6-வது இடத்தில் இருந்த தமிழகத்தை 3-வது இடத்திற்கும் தென் இந்தியாவில் தமிழகத்தை முதல் இடத்திற்கும் உயர்த்திய பெருமைக்குச் சொந்தக்காரரான மாண்புமிகு-புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் கூறி, இவ்வாறு சிறு சேமிப்பு மூலம் வசூல் செய்கின்ற பணத்தை, அந் தந்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, ஒட்டு மொத்த சிறு சேமிப்பு வருவாயையும், அந்தந்த மாவட்ட மக்களுக்கு செலவழிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் துறையின் மூலமாக வசூல் ஆகின்ற மொத்தத் தொகையில் 25 சதவிகிதம் மத்திய அரசினுடைய கடனாக அமையும். 75 சதவிகிதம் மாநில அரசினுடைய கடனாக அமையும். மாநில அரசு இந்த 75 சதவிகிதத்தையும் எந்தெந்த இனத்திற்கு, வளர்ச்சித் திட்டங்களுக்கு பொதுவாகப் பயன்படுத்த இயலுமோ அந்த அளவுக்குத் திட்டம் தீட்டி பயன்படுத்திக் கொண்டு வருகின்றது. ஆக, அரசுக்கு ஏற்படுகின்ற பற்றாக் குறையை ஓரளவுக்கு சமாளிப்பதற்கும், புதிதாகக் கடன் எழுப்பவோ அல்லது மத்திய அரசிடமிருந்து மேற்கொண்டு தொகை வாங்கவோ முடியாத நிலையில் இந்த சிறு சேமிப்பின் மூலமாக கிடைக்கின்ற கடன் தொகை ஓரளவுக்குப் பயன்படுகிறது. ஆக மாவட்டம் மாவட்டமாக அதனைப் பிரித்துத் தருவது என்பது இயலாது. மாநிலத்தில் பொதுவாக கருதப்படுகின்ற வளர்ச்சித் திட்டங்கள் அல்லது மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றுக்குத்தான் செலவழிக்க இயலும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு சிறு சேமிப்பை ஊக்கப் படுத்துவதற்காக 'சிறு சேமிப்பு ரதம்' போன்று பல்வேறு கவர்ச்சிகரமான திட்டங்களை செயலாற்றி வருகின்றார்கள். இந்த சிறுசேமிப்பை கூட்டுறவு நிறுவனங்களிலும், பள்ளிகளில், மாணவ மாணவியரிடையேயும் மேலும் ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்,

1994 மார்ச் 18]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவ மாணவி யரிடத்திலே ஊக்குவிப்பதற்கு பல்வேறு தன்மைகள் உரு வாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு மாணவனும் 100 ரூபாய் அளவுக்கு சிறு சேமிப்பிலே தன்னை ஈடுபடுத்திக் கொள்வானேயானால் அவனுக்குத் தனிப்பரிசு வழங்குகின்றோம் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் சிறுசேமிப்புத் துறையிலே ஈடுபட்டு, அந்த வசூலைச் செய்து தருகின்ற பள்ளிகளுக்கு சில குறிப்பிட்ட அளவுக்கு மின்சார விசிறிகள் போன்ற பல்வேறு ஊக்கப் பரிசுகள் தரப்படுகின்றன. அதில் ஈடுபட்டு மிகச் சிறப்பான முறையில், செம்மையாக நிறைவேற்றித் தருகின்ற பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் குறிப்பிட்ட அளவுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே தனிப்பட்ட முறையில் முகவர்கள் திரட்டித் தருகின்றபோது, ஆயிரம் ரூபாய்க்கு மேல் திரட்டித் தருகின்ற நிலை ஏற் படுமானால் மாநில அரசு 1 சதவிகிதமும், மத்திய அரசு 1 சதவிகிதமும், ஆக இரண்டு சதவிகிதம் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளில் பணம் பிக்சட் டெபாசிட்டில் போடும்போது, ஒரு வருடம், இரண்டு வருடம் அல்லது 3 வருடம் என்று போடுகிறோம். ஆனால் இடையில் கேட்டால் கூட கொஞ்சம் தொகையை பிடித்துக் கொண்டு தந்துவிடுகிறார் கள். அந்த வசதி சிறுசேமிப்பில் இருக்கிறதா? அப்படி இந்த வசதி இல்லாவிட்டால் இனிமேலாவது செய்துதர அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில திட்டங்களிலே அந்த வசதிகள் இருக்கின்றன. குறிப்பாக இந்திரா சேமிப்புப் பத்திரத்திலே போட்டால் $5\frac{1}{2}$ ஆண்டுகள் கழித்து இரட்டிப்பு மடங்காகக் கிடைக்கும். கிசான் சேமிப்புப் பத்திரத்திலே முதலீடு செய்வார்களானால் $5\frac{1}{2}$ ஆண்டுகள் கழித்து இரட்டிப் பாகக் கிடைக்கும். ஆனால் இடையிலே அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை தேவைப்படுகிறது என்று கருதினால் அந்த பத்திரத்தை எந்த வங்கியிலே வேண்டுமானாலும் அடகு வைத்து, தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வ தற்கு கிசான் சேமிப்புப் பத்திரம் போன்றவைகளிலே வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறுசேமிப்பு முகவர் ஒரு குறிப்பிட்ட தபால் அலுவலகத்தில் தன் பெயரைப் பதிவு செய்து வைத்திருக்கிறார். அவர் அந்த மாவட்டம் முழுவதும் பல இடங்களில் ஏஜன்சி மூலமாக சிறுசேமிப்பு வசூல் செய்கின்றபோது, அந்த மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டங்களில் வசூலிப்பதற்கு தடை இருப்பதாகத் தெரிகிறது. ஒரு மாவட்டத்திலே நியமிக்கப்பட்ட முகவர் சென்னையிலும், மற்ற மாவட்டங்களிலும் நிதியை சேர்க்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற முகவர்கள் அந்தந்த மாவட்டங்களிலே இருப்பவர்களிடத்திலே நிதி திரட்டித் தருகின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலே தான் அது அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால் ஒரு சிலர் வேறு சில மாவட்டங்களுக்குச் சென்று நிதியை வசூல் செய்கின்ற சூழ்நிலைகள் ஏற்பட்டுவிடுமானால், அந்த மாவட்டத்தில் உள்ள முகவர்களுக்கு அது இடர்ப்பாடாக அமையுமென்ற காரணத்தாலேதான் இது நடைமுறையிலே வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, இதற்காக என்று தனியாக ஆணை பிறப்பிக்கப்பட்ட தன்மை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பினால் நல்ல பயன்களைப் பெறுகின்ற நமது மக்களுக்கு மேலும் உதவுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் கட்டாய சிறு சேமிப்புத் தொகை செலுத்த அமைச்சரவர்கள் அறிவுறுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்.

1994 மார்ச் 18]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று கட்டாயமாகச் செலுத்த வேண்டுமென்று ஆணையிடுவதில் ஒன்றும் தகராறு இருக்காது. எனக்கும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். அதற்குப் பிறகு வருகின்ற எதிர்ப்பை யார் சமாளிப்பது என்பதுதான் கவலைக்குரிய ஒன்றாக இருக்கும். வீண் வம்பை விலைக்கு வாங்குவானேன் என்றுதான் அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் டெப்பாசிட் செய்வதில்தான் கவர்ச்சி இருக்கிறதென்று அனைவரும் கருதுவதாலோ அல்லது அதிலே ஈசியாகப் பணம் எடுக்க முடியுமென்ற நிலையினாலோ தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில்தான் டெப்பாசிட் அதிகமாகச் செய்கிறார்கள், சிறுசேமிப்புத் துறை மூலமாக சிறு சேமிப்பு வங்கிகளைத் தமிழ்நாட்டில் அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா அல்லது மத்திய அரசுக்கு சிறு சேமிப்பு வங்கிகளை அமைக்க அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சிறு சேமிப்பு வங்கிகள் என்று தனியாக அமைக்கப்படவில்லை. அது துவக்கப்பட்ட காலத்திலிருந்து அது எல்லா மக்களுக்கும் பயன்படுகின்ற வகையில் அமைய வேண்டுமென்ற நோக்கம் கருதித்தான் அஞ்சலகங்களில் சிறு சேமிப்பு வங்கி தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஸ்மால் சேவிங்ஸ் பேங்க் என்ற பெயரில் ஒவ்வொரு அஞ்சலகத்திலும் ஒரு தனிப் பிரிவு இயங்கிக் கொண்டு வருகிறது. அப்படி இயங்கிக் கொண்டு வருகின்ற காரணத்தால்தான் இந்தியா முழுவதும் 1,40,000 சிறு சேமிப்பு வங்கிகள் இந்த அஞ்சலகங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் 12,400 வங்கிகள் அஞ்சலகங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இதற்காக தனி வங்கி ஏற்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்று சொல்லும்போது பேங்குகளில் மிகப் பெரிய பேங்காகச் சொல்லப்படுகிற ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவுக்கே 8,500 வங்கிக் கிளைகள்தான் இருக்கின்றன. அதற்கு மேலே செல்ல முடியாது. அதைவிட அஞ்சலகங்களில் இந்த வங்கிகள் இருப்பது பல சிற்றூர்களில் வாழும் மக்கள் தங்களுடைய வைப்புத் தொகையை வைக்க எளிதாக இருக்கும் என்று கருதி, அந்த வங்கி அங்கேயே இருக்க வேண்டுமென்று மத்திய அரசு அடிக்கடி வற்புறுத்தி வருகிறது.

[1994 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அதிக அளவில் மக்கள் சேமிக்கும் வகையில் இன்னும் அதிகப் பரிசுகளை அரசு அறிவிக்குமா? அதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை அதிக அளவில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் துறையைப் பொறுத்த வரையில் அதிகமானப் பரிசுகள் வழங்குவதிலும் ஊக்கத் தொகை வழங்குவதிலும் அதற்காக ஓரளவுக்கு ஆதரவு திரட்டுகின்ற தன்மையை மேற்கொண்டிருப்பதிலும் இந்தியாவிலேயே நம்முடைய தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது. அதனால் ஓரளவுக்கு ஆண்டுக்காண்டு கூடுதலாக சிறு சேமிப்பில் நிதியைத் திரட்டிக் கொண்டு வருகிறோம். 1972-73-ல் சிறு சேமிப்பு மூலமாக மொத்த வசூல் 20 கோடி ரூபாய்தான். அது மெள்ள மெள்ள வளர்ந்து சென்ற ஆண்டு இலக்கு 550 கோடி ரூபாய் என்று சொல்லி நமக்கு 614 கோடி ரூபாய் கிடைக்கின்ற அளவுக்கு மக்களுடைய ஊக்கம் இதிலே வளர்ந்திருக்கிறது.

இந்த ஆண்டு 590 கோடி ரூபாய் சிறு சேமிப்பு இலக்காக நாம் நிர்ணயித்திருந்தாலும் 750 கோடி ரூபாயாவது திரட்டித் தாருங்கள் என்றுதான் ஊக்குவித்துக் கொண்டு வருகிறோம். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் உதவி செய்வார்களானால் அது பெரும் நன்மையாக இருக்கும். எவ்வளவு விழிப்புணர்ச்சி தரவேண்டுமோ அதைத் தந்து வருகிறோம் எவ்வளவு விழிப்பு வரவேண்டுமென்று நாம் செய்தாலும் கூட தூங்கிக்கொண்டே இருப்பவர்கள் தூங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களை விழிப்படையச் செய்ய மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் பேருதவி புரிவார்களேயானால், பரவலாக ஆதரவு கிடைக்குமேயானால், இந்தத் திட்டம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் மிகமிகப் பயன்படுபவையாக அமையும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே முகவர்களாக இருந்து சிறுசேமிப்பிற்காக நிறைய பணம் சேர்த்துத் தருகிறோம். அப்படிக் கொடுக்கின்றபோது அதற்காகக் கொடுக்கப்படுகின்ற ஊக்கத் தொகையை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிக்கே கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1994 மார்ச் 18]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் முகவர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டு பணம் திரட்டி தருவார்களேயானால் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சதவீதம் அவர்களுக்கு ஊக்கத் தொகை தருகிறோம். அதை அவர்களே செலவு செய்தாலும் செய்யலாம். அவர்களுடைய தொகுதிக்கே செலவு செய்தாலும் செய்யலாம். ஆனால் பொதுவாக ஒவ்வொரு மாவட்டமும் திரட்டித் தருகின்ற தொகையிலேயிருந்து அவர்கள் திரட்டித் தருகின்ற பர்சன்டேஜ் அதனுடைய அளவு எவ்வளவு என்று கருதி அவர்களுக்கு ஊக்கத் தொகை தருகிறோம். சாதாரணமாக இலக்கை நிறைவேற்றித் தருவார்களேயானால் சென்னை போன்ற பெரு நகர்களுக்கு 75 இலட்சம் ரூபாய் மாவட்டத்திற்கு என்று ஊக்கத் தொகையாகத் தருகிறோம். இப்படி 10 லட்சம் ரூபாயிலிருந்து 75 லட்சம் ரூபாய் வரையில் எல்லா மாவட்டங்களுக்கும் ஊக்கத் தொகைகள் தரப்படுகின்றன. அந்த ஊக்கத் தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தந்த மாவட்டத்தினுடைய பொது நன்மைகள் கருதி பொதுமக்களுக்கு எந்தெந்த இன்றியமையாப் பணிகள் தேவைப்படுகின்றன என்று கருதுகிறார்களோ அதை மாவட்ட ஆட்சித் தலைவர்களே அந்தந்த மாவட்டத்திலே செலவழிக்க முழு உரிமையும் தரப்பட்டிருக்கிறது. அதற்காக அரசையோ, அல்லது அரசுத்துறை நிதிச் செயலாளரையோ, அல்லது நிதி அமைச்சருடைய அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்ற அவசியமும் இல்லை. அந்தந்த மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரே செய்யலாம். அப்படிக் கோயம்புத்தூர் மாவட்டம் போன்றவைகளுக்கு ரூ. 40 லட்சம், ரூ. 45 லட்சம், ரூ. 50 லட்சம் என்று ஊக்கத் தொகை தரப்பட்டு வருகிறது. சென்னைக்கு ரூ. 75 லட்சம் ஊக்கத்தொகை தரப்பட்டு வருகிறது. வேறு சில மாவட்டங்களுக்கு 20 லட்சம், 25 லட்சம் ரூபாய் தரப்பட்டிருக்கிறது. அதை அந்த மாவட்டங்களின் நலன் கருதி, மேம்பாடு கருதி எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திட்டமிட்டுச் செலவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 22, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

22—

திருவையாற்றில் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுதல்.

* 11088— திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாற்றில் உள்ள குற்றவியல் நீதிமன்றம், முன்சீப் கோர்ட்டு, இரண்டிற்கும் ஒரே இடத்தில் கட்டிடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1994 மார்ச் 18

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி சட்ட அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவையாற்றில் உள்ள குற்றவியல் நீதிமன்றம் மற்றும் முன்சீப் கோர்ட் இரண்டிற்கும் ஒரே இடத்தில் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாற்றில உள்ள குற்றவியல் நீதிமன்றம், முன்சீப் கோர்ட் இரண்டிற்கும் இடைவெளி தூரம் அதிகமாக இருப்பதால், ஒரே இடத்தில் இரண்டுக்கும் கட்டிடம் கட்டித் தர அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒரு முடிவெடுத்து, முன்சிப் கோர்ட் மற்றும் ஜுடிசியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் இரண்டையும் கம்பைன்டு கோர்ட் பில்டிங் - ஆக ஆக்குவதற்காக 75 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதற்குத் தேவைப்பட்ட நிலத்தையும் கையகப்படுத்தி இருக்கிறது. இன்றைக்கு உயர்நீதிமன்றத்திற்கு அந்தச் செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறது. அததோடு மத்திய அரசின் நிதியிலும் அதைச் செய்யலாம் என்றும் அரசு ஒரு கருத்து கொண்டிருக்கிற காரணத்தாலே, மத்திய அரசு, உயர்நீதிமன்றம் ஆகிய இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் பதில் வந்தவுடன் திருவையாற்றில் கம்பைன்டு கோர்ட் பில்டிங் 75 லட்சம் ரூபாயில் கட்டப்படும்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவையாற்றில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்தையும் முன்சீப் கோர்ட்டையும் ஆக இரண்டையும் ஒன்றாக ஒரே இடத்தில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு நமது இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். நீண்ட காலமாக குற்றவியல் நீதிமன்றம், ஒரு சிறிய குறுகிய வட்டத்தில் இருப்பதால், அங்கே நீதிமன்றத்திற்கு வருகின்றவர்கள் அந்த இடத்திலே நிற்க முடியாமல், போக்குவரத்து சாலையில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது அங்கு இருக்கிற நீதிபதிகள் அந்தக் குற்றவாளிகளைக் கூப்பிடுகின்றபோது, அவர்கள் தெரியாத நிலை ஏற்படுகிறபொழுது, அவர்கள் வருவதற்குத் தாமதமாகிற காரணத்தினால், அந்த நீதிபதி** வாரண்ட் அல்லது ** தீர்ப்பு என்று கூறிவிடுகிறார் உடனே. ஆகவே, மறுபடியும் கோர்ட்டுக்குச் சென்று, அதற்கு வேண்டிடிய காரியங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. அதேபோல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.